பாணந்துரை நகர சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாணந்துரை நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று,அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று,தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய2024 திசெம்பர்31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும்,2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாணந்துரை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உள்ளூராட்சி மன்ற நிறுவன்களுக்கான இலங்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுநடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாடு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளுராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமத்துடன் தொடர்பான இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் 3 அத்தியாயத்தின் 3.7 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கைகளில் பாதீட்டு தகவல்கள் நிதி கூற்றுகளில் முன்வைக்கப் பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் பாதீட்டு தகவல்களை நிதிக் கூற்றுகளில் முன் வைப்பதாக	நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும
(ஆ)	நியமத்தின் 3 அத்தியாயத்தின் 3.30 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றின் கீழ் நிதித் தொழிற்பாடு தேசிய காசுப் பாய்ச்சல் கணக்கீடு செய்யும் போது கிடைத்த மூலதன செலவின மானியத்தின் பெறுமதி ரூபா. 17,162,541 தொகை வெளிப்பாய்ச்சலாக பதிவு செய்யப்பட்டிருந்தது.	ஆராய்ந்து பார்த்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக.	நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
(இ)	நியமத்தின் 3 அத்தியாயத்தின் 3.29 ஆம் பந்தியின் படி காசு பாய்ச்சல் கூற்றின் கீழ் ப்முதலீட்டு செயற்பாடுகளில் உள்ளான தேறிய காசுப் பாய்ச்சல் ஆண்டின் பணமாக கிடைத்த பெறுமதி ரூபா. 12,930,235 ஆக இருந்திருக்க வேண்டிய போதிலும் ரூபா. 13,036,860 ஆக சீராக்கப்பட்டு	இத்தொகை ஆண்டுக்குரியதாக இருப்பதால் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக.	நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

இருந்தது.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(ஈ)	நியமத்தின் 3 அத்தியாயத்தில் 3.32 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் கீழ் செயற்பாடுகளினால் வரும் தேறிய காசுப் பாய்ச்சலை கணக்கீடு செய்யும் போது KIOSKஇயந்திரத்தின் ஆண்டுக்குரிய வருமானம் ரூபா. 42,572 நடப்பாண்டின் மிகையுடன் சீராக்கப்படாது இருந்ததுடன் அந்த இயந்திரத்தின் முதலீட்டில் இருந்து கிடைத்த வருமானமான ரூபா. 35,539 முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும் செலவின பகுப்பாய்வில் அச்த இயந்திரத்தின் பெறுமதி குறைந்தமை வேறாக வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	எதிர்காலத்தில்சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
(உ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் மீண்டும் நிதி நடப்பாண்டு நிதிக் கூற்றுக்கள்காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து பெறுமதிக்காக முன்னாள் சமப்படுத்த கூடிய வகையில் காலப்பகுதி தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டின் பெறுமதி சரியாக முன்வைக்கப்பட்டிருக்கவில்லை	எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிமை மூலதன மாற்றல் கூற்றின் பிரகாரம் திரண்டத மிகை ரூபா. 666,798,636 ஆக இருந்த போதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அப்பெறுமதி ரூபா. 666,565,418 ஆக காண்பிக்கப்பட்ட மையால் ரூபா. 233,218 ஆன தொங்கல் கணக்கு மீதி ஒன்றாக இருந்தது.	எதிர்காலத்தில் திருத்தம் செய்துகாண்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ)	2024 திசெம்பர 31 இல் உள்ளவாறு ரூபா. 26,258,060 ஆன மூலதனச் செலவின மானியக் கணக்கு மீதி சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றின் தேறிய சொத்துக்களை கணக்கிடும் போது திரண்ட மிகையின் இனங்காணப்படாத மூலதன செலவின மானியத்தின் பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் திருத்தம் செய்துகாண்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.
(இ)	2023 ஆம் ஆண்டில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களுக்குரிய பெறுமானத்தேய்வு அகற்றுதல் மீளாய்வாண்டில் சீராக்கும் போது மீள் மதிப்பீட்டு ஒதுக்க கணக்கு ரூபா. 24,207ஆல் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் திருத்தம் செய்துகாண்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக	கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**இணக்கமின்மைகள்**	**சபையின்கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	நகர சபை கட்டளைச் சட்டம்			
(i)	170 (2) ஆம் பிரிவு	நிலுவை வீதவரி அறவீட்டின் இறுதிக் கட்டமாக ஆவணங்கள் தடை செய்யப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் வருடத்தில் 03 மற்றும் 02 பிரிவுகளுக்குரிய ஆதனங்கள் தடை செய்யும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று செயல் படுத்தப்படுவதாக.	நகர சபை கட்டளை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii)	164 (2) பிரிவு மற்றும் 1968 இன் 14ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சட்டம்	சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட ஹொட்டலிருந்துகட்டணங்கள் அறவிடப்படாது தொகையை உறுதிப்படுத்துவதற்காக நிதிக் கூற்றுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கடிதங்கள் மூலம் மற்றும் வருமான பரிசோகர்கள் மூலம் அறிவிக்கப் பட்டுள்ளதாக.	நகர சபை கட்டளை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2009 ஏப்ரல் 16ஆந் திகதி 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை			
	(i) 02 (i) ஆம் பந்தி	வெளிக்கள உத்தியோகத்தர்கள் தமது பிரதான அலுவலகத்திற்கு சமூகமளிக்கும் நாட்களில் வருகை மற்றும் வெளியேறல் கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மேற்படி சுற்றறிக்கைக்கு முரணாக சபையின் பொது சுகாதார பரிசோதகர் பதவியை வகிக்கும் உத்தியோகத்தர்கள் வருகை பதிவேட்டில் மாத்திரம் பதிவு செய்திருந்தனர்.	வருகை மற்றும் வெளியேறல் ப குறிப்பிடுவதற்காக பதிவேடு ஒன்று பேணிச் செல்வதாக	சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
	(ii)02(iv) ஆம் பந்தி	,வழக்கமான பணி நேரத்திற்குப் பிறகு வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்காக செலவிடப்பட்ட நேரம் கருத்திற் கொள்ளப்பட்டால் கைரேகை இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கைரேகை இயந்திரங்கள் மூலம் வருகை மற்றும் வெளியேறல் உறுதிப்படுத்தப்படாத 29 திட்டக் குழுக்களுக்காக 2024 ஜனவரி முதல் ஒக்டோபர் வரையிலான திட்டமிடல் குழு படிகளாக	2025 ஜனவரி முதல், திட்டமிடல் குழுக்கள் இறுதியில் கைரேகைகளைப் பதிவு செய்வதற்குஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த நாட்களுக்கு மேலதிக நேரப் படிகள் வழங்கப்படவில்லை என்பதாக.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

		ரூபா 480,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.		
(இ)	2012 ஜூலை 11 ஆம் திகதியWP/LGD/01/2012 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் (XVI) ஆம் பந்தி எண்	திட்டக் குழு நடாத்தப்பட வேண்டிய கால அளவு 02 மணி நேரத்திற்கு மேல் இருக்க வேண்டியுதடன், மேலும் அது வழக்கமான வேலை நேரத்திற்கு வெளியே நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பழடப்பட்டிருந்த போதும், திட்டக் குழு உறுப்பினர்களுக்கு கைரேகை பதிவுகள் வைக்கப்படாததால், திட்டக் குழு உண்மையில் 2 மணி நேரம் நடத்தியதா என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	2025 ஜனவரி முதல், திட்டமிடல் குழுக்கள் இறுதியில் கைரேகைகளைப் பதிவு செய்வதற்குஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த நாட்களுக்கு மேலதிக நேரப் படிகள் வழங்கப்படவில்லை என்பதாக.	வழக்கமான பணி நேரத்திற்குப் பிறகு வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்கு நேரத்தை அடிப்படையாகக் கொண்டால், அந்த நேரத்தை கைரேகை இயந்திரத்தின் மூலம் பயன்படுத்தி உறுதிப்படுத்த வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 75,262,532ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 76,395,207ஆக இருந்தது.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நகர அபிவிருத்தி அதிகாரசபைக்காக மக்கள் வங்கியில் பேணி செல்லப்படுகின்ற கணக்கில் ரூபா.5,981,083ஆன மீதி ஒன்று காணப்பட்டதுடன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்துடன் அதனை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படவில்லை.	பணம் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்த முடியாமல் போனதாக உள்ளதாக	நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும்.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா ;000	ரூபா ;000	ரூபா ;000	ரூபா ;000	ரூபா ;000	ரூபா ;000	ரூபா ;000	ரூபா ;000
(i)	வீதவரியும் வரியும்	73,000	72,252	76,155	40,276	73,000	73,248	57,330	15.918
(ii)	வாடகை		8,228	7,612	10,770	6,622	7,833	6,775	10,172
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்	421	442	442	-	421	460	460	
(iv)	ஏனைய வருமானம்	2,040	1,965	1,956	9	1,660	1,934	1,944	59
	மொத்தம்	75,461	82,887	86,165	51,055	81,703	83,475	66,509	26,149

2.3.2 சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**வீதவரி மற்றும் வரி**		
(i)	காலப் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வீதவரி மற்றும் மொத்த குத்தகை நிலுவை ரூபா 39,639,846 ஆக இருந்ததுடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ரூபா 20,428,110 அதாவது 52வீதம் அளவிடப்பட்டு இருக்கவில்லை.	2025 முதலாம் காலாண்டுக்குரிய 07 நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டு நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	நிலுவை வீத வரியை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(ii)	காலப் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டு மொத்த வீதவரி மற்றும் குத்தகை நிலுவை ரூபா 40,277,610 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட நிலுவை ரூபா 30,423,130 ஆகவும் 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ரூபா. 9,854,479 ஆக இருந்ததுடன் ரூபா. 50,000 மிகைத்த 92 வீத வரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா. 9,705,260 ஆக இருந்தது.	அறவீட்டுச் சதவீதம் விகிதம் 29.47 சதவீதமாக இருந்ததுடன்,ரூபா. 50,000 இற்கும் அதிகமான மீதியாக உள்ள 65 சொத்துக்களிலிருந்து அறவிட வேண்டிய மீதி ரூபா.5,569,990 ஆகவும் உள்ளதாக.	நிலுவை வீத வரியை விரைவில் அற விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(iii)	06 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதவரியாக பெறவேண்டிய ரூபா 238,849 தொகையை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குறித்த 06 அரசாங்க நிறுவனங்களுக்குரிய மதிப்பீட்டு அறிவித்தல் மற்றும் இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் நிறுவன மட்டத்திலும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக.	நிலுவை வீத வரியை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) கழிவு பொருள் வரி

2024 ஜனவரி 01 உள்ளவாறு ரூபா. 2,105,700 ஆன கழிவுப்பொருள் நிலுவையில் ரூபா 962,400 அதாவது 45 சதவீதம் 2024 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டு இருக்கவில்லை. அதன் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மொத்த கழிவு பொருள் வரி பெறுமதி ரூபா 2,107,540 ஆக இருந்ததுடன் சபையால் அதனை அறவிடுவதற்கு சாதகமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இறுதி கணக்கின் பிரகாரம் அம்மீதிகள் முறையே ரூபா. 2,107,540 மற்றும் ரூபா. 1,105,700 ஆக இருந்ததால் 2024 ஜனவரி 01 ஆம் திகதி வரை கழிவுப் பொருள் வரி நிலுவையில் ரூபா 921,400 தொகை குழு தீர்மானம் ஒன்றின் மூலம் புத்தகங்கள் இருந்து பதிவழிக்கப்பட்டதுடன் 2025 மே வரையில் ரூபா 1,680,540 ஆன தொகை ஒன்று அறவிடப்பட்டு இருக்கவில்லை என்பதாக	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) வாடகை

(i)	தகவல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் வியாபார நிலைய வாடகை சேகரிக்க வேண்டிய வருமானம் ரூபா 16,697,007 ஆக இருந்ததுடன் 2024 திசெம்பர் 31 ஆமேலும் ம் திகதி வரை 60 வீதமும் ரூபா. 10,154,765 தொகை அறவிடுவதற்கு காணப்பட்டது.	நிலுவை தொகையை அற விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(ii)	சபையால் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள சந்தை வீதியின் 18 கடைகளுக்குரிய 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறுரூபா. 7,661,875 ஆன வருமானத்தை சேகரிப்பதற்கு சபை தவறி இருந்தது.	நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(iii)	இலக்கம் L18 ஆம் இலக்க கடை நடத்திச் செல்லப்படுகின்ற கடை உரிமையாளர் மற்றும் நகர சபைக்கு இடையே எவ்வித எழுத்து மூலமான உடன்படிக்கை ஒன்று இல்லாமல் இருந்ததுடன் அக்கடையிலிருந்து 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா. 2,068,000ஆக இருந்தது.	எஞ்சிய நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஈ)	புகையிரத திணைக்களத்திற்குரிய சபையினால் 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த புகையிரத வீதி காணியின் குத்தகை காலம் 1983 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்ததாக புகையிரத திணைக்களத்தின் கடிதம் ஒன்று இன் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட போதும் அந்தக் குத்தகை உடன்படிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படா திருந்ததுடன் புகையிரத காணியில் சபையினால் பேணிச்செல்லப்படுகின்ற 22 கடை தொடர்பாக பின்வரும் சட்டத்தை அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.		
(i)	இக்கடை உரிமையாளர்கள் மற்றும் நகர சபைக்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை காலத்தை மிகைத்திருந்த போதும் நீண்ட காலமாக புதிய உடன்படிக்கைகளுக்காக மேற்கொள்வதற்கு நகர சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உடன்படிக்கை செய்வதற்கு வருகை தருமாறு அறிவித்து கடிதங்கள் மூலம் குத்தகையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக	உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	புகையிரத வீதி கடைகளுக்காக புதிய முன்மொழிவின் பிரகாரம் 2018 ஜனவரி 01ஆம் திகதி முதல் கடை வாடகை தொகை அறவிடுவதற்கு 2019 ஆகஸ்ட் 01ஆம் திகதி பொது சபை தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததால் முன்னர் காணப்பட்ட மதிப்பீட்டை விட புதிய மதிப்பீட்டுத் தொகை அதிகரித்தமையால் அதை கொடுப்பனவு செய்வதற்கு	2025.05.25 ஆம் திகதி வரை ரூபா. 67,680 தொகை அறவிடப் பட்டிருந்ததுடன் நிலுவையாக காணப்பட்ட கடைகளின் எண்ணிக்கை 10 வரை குறைவடைந்து உள்ளதாக.	நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	குத்தகை யாளர்கள் நிராகரித்திருந்தனர். அவர்களால் தொடர்ந்தும் பழைய மதிப்பீட்டுத் தொகையை செலுத்தப பட்டிருந்ததால் நிலுவையொன்று உருவாகியிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்நிலுவை 14 கடை களிருந்து ரூபா. 835,368 ஆக இருந்தது.		
(iii)	சபையினால் 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுக்கப்பட்ட புகையிரத வீதி காணி வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 22 வாடகை உரிமையாளர்களால் தமது விருப்பத்தின் பேரில் அங்கு கட்டிடங்களை நிர்மானித்திருந்ததுடன் அக்கடைகளுக்கு அருகில் உள்ள காணிப்பகுதியில் பாணந்துறை நகர சபையால் வழங்கப்பட்டுள்ள முறை தொடர்பான போதியளவு தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	திட்டவட்டமான பதிலொன்று வழங்கப்படவில்லை	தேவையான எழுத்து மூல சான்று சான்றுகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(உ)	நகர சபையால் தற்காலிக வியாபார கடைத் தொகுதியில் 54 கடைகள் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா. 795,000 ஆக இருந்தது.	.தற்போது இறுதி அறிவித்தல் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக.	நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	மாகாணசபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகார தரப்பினரிடம் இருந்தும் 2024 டிசம்பர் 31 இல் கிடைக்கவேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 143,290,640 ஆக இருந்தது.	2022 ஜனவரி முதல் திசெம்பர் வரை சேகரிக்கப்பட்ட முத்திரை கட்டணங்கள் ரூபா. 369,000 ஆக இருந்தமையால் ,எஞ்சியுள்ள தொகை ரூபா. 142,921,640 ஆக இருந்ததாக	நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்..

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றதல்

நுகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கட்டிடங்கள் நிர்மாணம் தொடர்பாக 2024 ஆம் ஆண்டில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை குடியிருப்புத் திட்டங்கள், வியாபாரத் திட்டங்கள் மற்றும் எல்லைச் சுவர் திட்டங்களாக முறையே 62 குடியிருப்பு திட்டங்களில் 10 திட்டங்களும் 16 வியாபாரத் திட்டங்களில் 1 திட்டமும் 20 எல்லைச் சுவர் திடடங்களில் 04 திட்டங்களும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்படவில்லை. 2024 திசெம்பர் 31,இல் உள்ளவாறு வழங்கப்பட்ட இணக்கச் சான்றிதழ்களின் எண்ணிக்கை குடியிருப்புக்காக 20 மற்றும் வியாபாரங்களுக்காக 02 ஆக இருந்தன.	திட்டமிடல் விண்ணப்பங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக அங்கீகாரத்தில் தாமதம் ஏற்படுகின்றதுடன் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு திருத்தப்பட்ட திட்டங்கள் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் , அவை திட்டக் குழுவின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படும்.	விண்ணப்பங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 2015 முதல் 2030 வரை செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு நீண்டகால திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் 2024 ஆண்டிற்குள் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்த திட்டவட்டமான நிகழ்ச்சிகள் இனங்காணப்பட்டு அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	செயல்நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக	நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தில் 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த இலக்கை 2024 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்க வேண்டும்.
(இ)	**திடக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**		
	2024 ஜனவரி முதல் ஜூன் வரை, திடக் கழிவுகள் எதுவும் விற்பனை செய்யப்படவில்லை, அப்புறப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் மட்டுமே விற்கப்பட்டன.	அதிக செலவில் கழிவுகளை அகற்றுவதற்குப் பதிலாக, வருமானத்தைஈட்டும் வழிமுறையாக சபைக்கு	திடக்கழிவுப்பொருள் முகாமைத்துவத்தை முறையாக மேற்கொள்ள வேண்டும்.

		வருமானத்தை ஈட்ட முடிந்தது, எனவே குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களைப் பயன்படுத்தி எஞ்சிய கழிவுகள் பன்றி தீவனத்திற்காக விற்பனை செய்யப்பட்டன.	
	2024 ஜனவரி முதல் ஜூன் வரை, திடக்கழிவு நிலையத்தில் கழிவுப்பொருள் பிரிக்கும் சேவையில் பணிபுரியும் 14 பேருக்கு மேலதிக நேரப்படியாக ரூபா 1,630,508 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன்,இரவில் சேவையில் புரிவதற்காக 5 ஊழியர்களுக்கு ரூபா. 153,130 தொகை செலவிட்டு இரவில் சிற்றுண்டிக்காக செலவிடப்பட்டிருந்தது.	2024 ஜுலை வரை இந்தச் செலவினமும் குறைத்து,மேலதிக நேரத்தை மாத்திரம் வழங்குவதன் மூலம் கழிவு முகாமைத்துவம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதாக	திடக்கழிவுப்பொருள் முகாமைத்துவத்தை முறையாக மேற்கொள்ள வேண்டும்.
(iii)	2024 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை 1150 கிலோகிராம் பிளாஸ்டிக் மட்டுமே விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் தொடர்ந்து உருவாகும் இவ்வளவு சிறிய அளவிலான கழிவுகளை விற்பனை செய்வதற்கான காரணங்கள் கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தன..	சேகரிக்கப்பட்ட பிரிக்கப்படாத அனைத்து கழிவுகளையும் சேமிக்க போதுமான இடம் இல்லாதிருந்ததுடன் , மேலும் மழை மற்றும் டெங்கு ஆபத்து சூழ்நிலையால் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக, பெரும்பாலான கழிவுகளை கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்திற்கு கொண்டு செல்ல வேண்டியிருந்தது, மேலும் பேல் செய்யப்பட்ட கழிவுகளை INSEE நிறுவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டியிருந்தது.	திடக்கழிவுப்பொருள் முகாமைத்துவத்தை முறையாக மேற்கொள்ள வேண்டும். .

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பாணந்துறை நகர சபைக்குச் சொந்தமான 6 காணிகளின் பெறுமதி அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. .	இந்த 06 காணிகளும் அளவீட்டு நோக்கங்களுக்காக வழங்கப்பட்டுள்ளதுடன், திட்ட வரைபடம் கிடைத்தவுடன் மேலும் பணிகள் மேற்கொள்ளப்படும்.	காணிகளை அடையாளம் கண்டு கணக்கிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2000 ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த ரூபா 1,075,318 பெறுமதியான முற்பணங்கள், மீளாய்வுாண்டிலும் அறவிடப்படவில்லை.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் மூலம் அதைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	முற்பணங்களை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக,சபையின் செயற்திட்ட மற்றும் தேவைப்பாட்டிற்காக 2023 ஆம் ஆண்டில் இரண்டு ஊழியர்கள் மீளய்வாண்டில் ஒன்பது ஊழியர்கள் தொழிலாளர் அடிப்படையிலும் பணியமர்த்தப்பட்டிருந்தனர்.	அதிகாரபிரதேசத்தில் கழிவுகளை அகற்றுவதற்கு தற்போதுள்ள சுகாதாரப் பணியாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாததாலும், ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளதாலும், கழிவு அகற்றும் நடவடிக்கைகளைத் தொடர வேண்டியதன் அடிப்படையில் பணியாளர்கள் உழைப்பு கொள்வனவு அடிப்படையில் பணியாளர்கள் எடுக்கப்பட்டுள்ளனர்.	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை திருத்தம் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஒரே தடவையில் தீர்வு செய்ய வேண்டிய போதிலும் சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற 8 ஊழியர்களிடமிருந்து மொத்தம் ரூபா 1,729,522 ஆன கடன் மீதியொன்று மீளப் பெற்றுக கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இடமாற்றம் பெற்றுச் சென்ற 12 ஊழியர்களில் டமிருந்து மூன்று பேரின் கடன் நிலுவைகள் தீர்க்கப்பட்டுவிட்டதாகவும், 09 பேரிடமிருந்து மாதந்தோறும் உரிய தவணைகள் பெறப்பட்டு வருவதாகவும், அந்த கடன் மீதித் தொகை ரூபா 1,443,370 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	கடன் மீதிகளைத் தொகையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(இ)	.2024 திசெம்பர் 31 ,இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதிரூபா. 50,832,763 ஆக இருந்ததுடன் அறவிட முடியாத மற்றும்,விபரங்கள் தெரியாத கடன் மீதி ரூபா 521,639 ஆக இருந்தது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 2,234,332 ஆகவும், ஓய்வு பெற்ற அதிகாரிகளிடமிருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா. 1,356,900 ஆகவும், இறந்த மற்றும் சேவையை விட்டுச்சென்ற அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா. 958,651 ஆகவும் இருந்தது.	இறந்த மற்றும் சேவையை விட்டுச்சென்ற அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 911,652 வரை குறைவடைந்துள்ளதாகவும் இக்கடன் மீதிகளை எதிர்வரும் காலங்களில் மாதாந்தம் அறவிடப்பட்டுவருவதுடன் ஏனைய ஊழியர்களிடமிருந்து கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக .	நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பாணந்துறை கடற்கரையில் வைப்பதற்காக பாணந்துறை நகர சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட கழிப்பறை அமைப்புடன் கூடிய கொள்கலனை, 2020 ஜுன் 23,ஆந் திகதிரூபா. 189,040 ஆன பழுதுபார்ப்பதற்காக ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. 2020செப்டம்பர் 23, வரை அவர்கள் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொண்டு வந்த நிலையில், நகர சபை அதன் கூரையை நிறுவும் திட்டத்தை தற்காலிகமாக நிறுத்தியது. இருப்பினும், 2020 முதல், இந்த திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை,அத்துடன் தற்போது ரயில் நிலைய சாலையில் நிறுத்தப்பட்டுள்ள கொள்கலன் பயன்படுத்த முடியாத அளவுக்கு மோசமடைந்துள்ளது.	மதிப்பீடு மீண்டும் பகுப்பாய்விற்காக தொழில்துறை குழுவின் பரிந்துரையின் பேரில், 2020 செப்டம்பர் 10,ஆந் திகதி பொதுச் சபையால்இந்த திட்டத்தை 2023 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு நீக்குவதற்கு,முடிவு செய்யப்பட்டதாக	.பயன்படுத்தாத சொத்துக்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	நகர சபையின் அலுவலகப் பணிகளை கணினிமயபடுத்து வதற்காக 07 விடயங்களைக் கொண்ட மென்பொருள் அமைப்பு 2017 ஆம் ஆண்டு ஒரு தனியார்	சேவை ஒப்பந்தத்தின் பிரிவு 5.2 இன் பிரிவின் பிரகாரம், பொதுவாக மென்பொருள் விற்பனைக்குப் பிறகு, மென்பொருளின் மொத்த	மென்பொருள் முறைமையை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை

	கம்பனியொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு, 2022 ஆம் ஆண்டுக்கான சேவைக் கட்டணமாக ரூபா. 178,500 செலுத்தப்பட்டிருந்ததுது. மேலும், 2017 ஜுன் 14 ஆம் திகதி ரூபா. 295,000 இற்குகொள்வனவு செய்யப்பட்ட சம்பளம் மற்றும் மனிதவள முகாமைத்துவ மென்பொருள் இன்றுவரை செயல்படுத்தப்படவில்லை. அந்த மென்பொருளுக்காக கொள்வனவு செய்த பணத்தினை விட கூடுதலாக, பயன்படுத்தாமல் சேவைகளுக்கான கட்டணங்களும் செலுத்தப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டது.	பெறுமதியில் 20 சதவீதம் சேவைக் கட்டணமாக ஆண்டுதோறும் செலுத்தப்பட வேண்டிய போதிலும், ஆனால நெப்கா ˙நிறுவனமவழங்கும் சேவைக்கு மென்பொருளின் மதிப்பில் 5 சதவீதம் ஆண்டு தோறும் அறவிடப்பட்டுள்ள தாகவும். கொள்வனவு செய்யப்படும் ஒவ்வொரு மென்பொருளின் பெறுமதியும் சேவைக் கட்டணமாக செலுத்தப்பட்டால், மொத்த பங்குகளின் பெறுமதியில் 10 சதவீதம் சேவைக் கட்டணம் ஆண்டுதோறும் அறவிடப்படும் என்று சம்பந்தப்பட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது. அதன்படி,முறைமையின் மொத்த மதிப்பில் 5 சதவீத சேவைக் கட்டணத்தை செலுத்துவது நிறுவனத்திற்கு நன்மை பயக்கும் என்பதால், அதன்படி எடுக்கப்பட்டுள்ளது.	எடுத்தல் வேண்டும்..
(இ)	2022 அக்டோபர் மாதத்திலிருந்து, மீளாய்வாண்டின் இறுதி வரையிலும்சபைக்குச் சொந்தமான ஒரு உழவு இயந்திரத்தை அப்புறப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	2024 ஜுன் 05ஆந் திகதி சொத்துக்களை கையகற்று வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் நடவடிக்கைகள் ம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக	விரைவில் சொத்துக்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். .

4. <u>கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்</u>

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பாணந்துறை நகர சபையின் 2024 வரவு செலவுத் திட்டத்தில் மீண்டெழும் செலவுகளுக்காக ரூபா 28,635,100 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், உள்ளவாறான ஏற்பட்ட செலவினம் ரூபா. 1,015,167 ஆக இருந்தது.	.எஞ்சிய தொகையில் செயற்திட்டக் கடன் வழங்குநர்களாக 2025 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட பணமும் நிறத்தி வைக்கப்பட்ட நிதியில் 10 சதவீதம் மற்றும் குறியீட்டு ரீதியில் ஒதுக்கப்பட்ட தொகையும்	பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட வேண்டும்.

		(ரூபா. 100 உட்பட) ஆகியவை அடங்கும் என்பதாக.	
(ஆ)	2024 திசெம்பர் 31,இல் உள்ளவாறு 05 செலவினக் குறியீடுகளுக்கு பாதீட்டில் ஒதுக்கப்பட்ட ரூபா. 2,200,000 தொகையில்,ரூபா. 2,046,838 பயன்படுத்தப்படவில்லை,எஞ்சிய 82 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.	பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை.	பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட வேண்டும்.
(இ)	2024 திசெம்பர் 31இல் உள்ளவாறு நலன்புரி செலவினப் விடயத்தின் கீழ் பாலர் பள்ளி சீருடைகள், சுகாதார செலவினப் விடயத்தின் கீழ் வீதியில் விலங்குகள் கட்டுப்பாட்டுக்கான கொடுப்பனவுகள், உணவு மாதிரி பரிசோதனைக் கட்டணம் மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவம் செலவினப் விடயத்தின் கீழ் சீருடைகள் போன்ற 14 செலவினத் தலைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபா. 8,259,100 ஆக இருந்தது.	2024 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 233,600 செலவில் முன்பள்ளி குழந்தைகளுக்கான சீருடைகள் வழங்கப்பட்டதாகவும் அது கடன் கொடுத்தோரின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.	பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட வேண்டும்.